பணிகளிலே ஈடுபட்டு கிணறுகளை ஆழப்படுத்துவது போன்றப் பணிகளைத் துவக்கினால் அங்கேயுள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கு மிகவும் ச லச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் நான் முந்தாநாள் பஸ்ஸிலே சென்றுகொண்டிருந்தபொழுது ஒரு விவசாயி சொன்னதைச் சொல்கிறேன். இதை என் சார்பிலேயோ எங்கள் கட்சியின் சார்பிலேயோ சொல்வதாக அமைச்சர்களோ அல்லது அரசாங்கமோ நினைத்துவிடக் கூடாது. அவ்வாறு சொன்ன விவசாயி நான் இருப்பதைப் பார்க்கவில்லை. அவர் சொல்கிறார், இந்த அரசாங்கம் நமக்கு கஞ்சா உற்பத்தி செய்ய பர்மிஷன் கொடுத்துவிட்டால் கஞ்சா உற்பத்தி செய்தால் நமக்கு நிறைய விலை கிடைக்கும் என்று சொல்கின்றார். அந்த அளவிற்கு கிராமப்புறங்களில் இன்றைக்கு மக்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த அத்தியாவசியப் பொருட்கள் அத்தனையும் அரசாங்கத்தின் மூலம் விநியோகம் செய்ய முழுமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அரசாங்கமே உணவுப் பொருட்களை வாங்கி விநியோகம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

[பிற்பகல் 12.20]

மத்திய அரசும் ஏழைகளுக்குப் பல காரியங்களைச் செய்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கும் நம்முடைய அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நெல்லுக்கு அதிக விலை கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த வெள்ளையறிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

8. அமைச்சரின் அறிக்கை.

மின்சாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பெறுவது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது கிராமப் புறங்களில் விவசாய மின் இணைப்புகளுக்கு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் முறை வைத்து மின்சக்தி தரப்படுகிறது. அதேபோல் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் சக்தி வழங்குவதில் நெரிசல் நேரத் தடைகள் (peak hour restrictions) அமுலில் உள்ளன. மின் உற்பத்தியில் ஒரு சீரான நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளதால் மேற்கூறிய கட்டுபாடுகள் அனைத்தும் 1981 செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து அறவே நீக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்மூலம் விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சக்தி எவ்விதத் தடையுமின்றி வழங்கப்படும். மீண்டும் இவ்வாண்டு நவம்பர் திங்களில் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய அவசியம்பற்றி முடிவு செய்யப்படும்.